



# FRIDAY SERMON

09 AUGUST 2019

(07 Dhul-Hijjah 1440 AH)

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH MUNIR AHMAD AZIM**

# THE STORY OF THE KA'ABA

## காபாவின் கதை (வரலாறு)

### TAMIL VERSION / தமிழ் பதிப்பு

சலாத்திற்கு பின்னர் தஷஹுஃத், தஅவ்வுசு மற்றும் அல்.்.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையியை ஆரம்பித்தார்.

மொக்கா, சவுதிஅரேபியாவில் மிகவும் பரபரப்பான ஒரு புனித நகரமாகிறது. புனித மசூதி (மஸ்ஜித்துல் ஹராம்) மெக்காவில் அமைந்துள்ளது. கடல் நிரப்பிலிருந்து 350 மீட்டர் உயரத்தில் அரேபியன் தீபகற்பத்தில் இந்நகரம் உள்ளன. புனித மசூதியின் நடுவில் காபா உள்ளது. இந்த மசூதி பக்கா (Bakka) என்ற இடத்தில் அமைந்துள்ளது.

அந்த மசூதியானது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் காலகட்டத்திலேயே அஸ்திபாரம் போட்டப்பட்டு பழக்கத்திலுள்ளது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் நபியாகவும் கலீலாகவும் இருந்தார். இந்த நகரத்தில்தான் இஸ்லாத்தின் திருதூதர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்தார். இந்நகரம் இஸ்லாத்தின் ஒளியை வரவேற்ற வெளிப்பாட்டின் தொட்டிலாகும். அங்குதான் இந்த புனித மசூதி உருவாகியது. இது மானிடகுலத்திற்காக பூமியில் முதன் முதலில் நிறுவுப்பட்ட மசூதியாகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வார்த்தைகளிலிருந்து இது தெளிவாகிறது.

**“எல்லா மக்களுக்காகவும் முதன் முதலாக உருவாக்கப் பெற்ற இல்லம் மெக்காவிலுள்ளதாகும். இது எல்லா உலகங்களுக்கும் அருளுக்குரியதும் நேர்வழிக்குரியதுமான இடமாகும்” (3:97)**

அபூத்தார் (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

**பூமியில் ஆதியாக தோற்றம் பெற்ற மசூதியை குறித்து நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர் “புனித மசூதி” என பதிலளித்தார். மீண்டும் நான் அவரிடம் இதற்கு பிந்திய நிலையில் தோற்றம் பெற்ற மசூதி யாது என்று வினாவினேன் அதற்கு அவர் “அல் அஹ்ஸா மசூதி” என்று பதிலளித்தார். மேலும் இவ்விரு மசூதிகளுக்கும் இடையேயான கால இடைவெளி குறித்து அவரிடம் கேட்டேன் அவர் 40 வருடம் என்று பதிலுரைத்தார்.**

கிழக்கு மற்றும் மேற்கு முஸ்லீம்கள் அனைவரும் தங்கள் பிரார்த்தனைக்காக காபாவுக்கு நேர் திரும்புகின்றனர். ஏறக்குறைய புனித மசூதியின் மையத்தில் காபா காணப்படுகிறது. இது 15 மீட்டர் உயரத்தைக் கொண்டுள்ளது. ஏறத்தாழ ஒரு பெரிய சதுரவடிவத்தில் காணப்படுகிறது. இது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கட்டளையின்படி இப்ராஹீம் நபி (அலை) அவர்களால் கட்டப்பட்டது. எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்.

**“மேலும் இப்ராஹீமிற்கு அந்த வீட்டின் நிலத்தை ஒதுக்கி, என்னுடன் எதையும் இணைவைக்காதீர். மேலும் எனது வீட்டை, வலம்**

**வருபவர்களுக்காகவும் தொழுகையில் நிற்பவர்களுக்காகவும் குனிபவர்களுக்காகவும் கிரம்பணிந்த விழுபவர்களுக்காகவும் தூய்மைப் படுத்துவீராக என்று கூறிய நேரத்தை நினைத்துப் பார்ப்பீராக" 22:27**

பவ்வானா (bawwa'na) என்ற வார்த்தையின் பொருள், "நாம் இதை இயக்கி, வழிகாட்டுதல் வழங்கி அதைக் கட்ட அனுமதியளித்தோம்" எனகூறலாம் இது குறித்து எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான். **"இப்ராஹீமும், இஸ்மாயிலும் அந்த வீட்டின் அடித்தளங்களை உயர்த்திய நேரத்தையும் எண்ணிப்பாருங்கள். இவ்விருவரும், எங்களுடைய இறைவா! எங்களிடமிருந்து இப்பணியை ஏற்றுக் கொள்வாயாக. நிச்சயமாக நீயே நன்கு கேட்கக் கூடியவனும், நன்கு அறியக் கூடியவனுமாவாய் என்று வேண்டினர்" (2:128)**

## THE KA'ABA DESECRATED BY THE POLYTHEISTS AND IDOLATERS.

## பலதெய்வவாதிகள் மற்றும் விக்கிரகாராதனையாளர்களால் இழிவுபடுத்தப்பட்ட காபா.

காலப்போக்கில், ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் கற்பித்த அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் அடிப்படைக் கொள்கையை அரேபிய மக்கள் மறந்துவிட்டார்கள். அவர்கள் தேவதைகள் மற்றும் விக்கிரகங்களை வணங்குபவர்களாக மாறினர். அவர்கள் 360 சிலைகளை வணங்கி வந்தனர். அவற்றுள் முதன்மையானதாக ஹுபல், லாத்தா மற்றும் உஸ்ஸா என்னும் தேவதைகள் இருந்தன. என்றிருந்தும் சிலை வழிப்பாட்டில் ஈடுப்பட்டு வந்த அம்மக்கள் ஏக இறைவனின் பெயரை (இலாஹ்) முழுமையாக மறக்கவில்லை. காபாவை வலம் வருகிற பாரம்பரியச் சடங்கையும் அவர்கள் பாதுகாத்திருந்தனர். ஆனால் அவர்கள் அப்பாரம்பரியச்சடங்கினை நன்முறையில் நிறைவேற்றாமல் சாத்தான் விரும்பும் முறையில் நிறைவேற்றி வந்தனர். இதனால் காபா ஒரு அநாகரீக இடமாக மாற்றப்பட்டது. உண்மையில், விக்கிரக ஆராதனை செய்பவர்கள் தங்கள் சடங்குகளை முற்றிலும் நிர்வாணமாக செய்ய வேண்டும் என்றும் கருதினார். ஏனென்றால், அவர்கள் அறிந்துகொண்டப்படி மனிதன் நிர்வாணமாகப் பிறந்தான், ஆகவே அவன் நீர்வணமாகவே தனது

தெய்வங்களுக்கு முன்பாக சென்று சடங்கு சம்பிரதாயங்களில் ஈடுபட வேண்டும் என்று நமபினர்.

இந்த சூழ்நிலைகளில் காபாவை வலம் வரும் சடங்குகள் ஒரு கொண்டாட்டத்தின் தோற்றத்தை பெற்றது. ஒரு பிரிவின மக்கள் வலம் வரும் சடங்குகளில் ஈடுபடும் பொழுது, வேறு சில மக்கள் வியாபாரங்களில் ஈடுப்பட்டிருந்தனர். அத்தோடு கண்காட்சிகளும் அங்கு நடைபெற்று வந்தது. மது, நறுமணபெருட்கள், வாசனை திரவியங்கள், தேவதைகள் மற்றும் பெண்களை உட்பட எல்லாவற்றையும் விற்பனை செய்தனர், மேலும் சில சமயங்களில் பெண்களை தள்ளுபடியில் விற்கப்பட்டது. சாத்தானின் சபதம் வெளிப்படையாக இங்கு நிறைவேறியது. ஆகவே அத்துடன் இப்ராஹீம் (அலை) அவர்களின் பணி அழிந்துவிட்டது என்று நமக்கு சுருக்கமாக கூற முடியுமா? அதற்கு பதில் இல்லை, ஒருபோதும் இல்லை என்பதுதான்.

## THE DIVINE PROTECTION ON THE KA’ABA.

## காபாவின் மீது இறை பாது காப்பு

அல்லாஹ் காபாவை என்றென்றும் கவனித்து வருகிறான். இப்ராஹீம் (அலை) அவர்கள் அவனை அழைத்து இவ்வாறு பிரார்த்தனை செய்திருந்தார்.

**“எங்களுடைய இறைவா! அவர்களுக்க உனது அடையாளங்களை எடுத்தோதி, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களைத் தூய்மைபடுத்தும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அவர்களிடம் தோற்றுவிப்பாயாக! நிச்சயமாக நீயே வல்லோனும், ஞானமிக்கோனுமாவாய்” (2:13)**

இந்த பிரார்த்தனை சுமார் 2500 ஆண்டுகளுக்குப் பிறகு முஹம்மது (ஸல்) அவர்களுக்கு 35 வயதாகயிருந்த போது நிறைவேற்றப்பட்டது. அவ்வயதில் அவர் முறைப்படி அல்லாஹ்வால் ஈர்க்கப்பட்ட நிலையில் வெளிப்பாடடை பெறுபவராக இருக்கவில்லை. காபா வரலாற்றின் முன்றாவது உறுதியான சுழற்சியை அவர் திறந்து வைத்தார். ஆப்ரகாமிக் சகாப்த்ததிற்குப் பிறகு, 23 வருடகாலத்திற்குள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் காபா வரலாற்றில் மிக பெரிய

மாற்றத்தை ஏற்படுத்தினார். அரேபியாவின் சிலைவழிபாட்டாளர்கள் அனைவரும் ஏகத்துவாதிகளாக அதாவது ஒரு கடவுளின் மீது நம்பிக்கை கொள்பவர்களாக மாறினர்.

காபா 2500 ஆண்டுகள் பழமையானது. மோசமான வானிலை காரணம் அதற்கு நிலை நிற்க முடியாத சூழ்நிலை உருவாகியது. கடைசி பெரிய வெள்ளபெருக்கத்தில் (திருநபி (ஸல்) அவர்களின் காலகட்டத்தில்) அதன் சுவர்கள் இடிந்து வீழ ஆரம்பித்தன. குறைஷிகள், இஸ்மாயீல் (அலை) அவர்களின் சந்ததியினர் அவற்றை மீண்டும் கட்டி எழுப்ப விரும்பினர். ஆனால் அப்ரஹாவின் வரலாற்றை அவர்கள் நினைவில் கொண்டிருந்ததால் அதற்கு அவர் தயக்கம் காட்டினர்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, 570-ஆம் ஆண்டில் அதாவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கும் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு எமனின் அபீசீனியன் ஆளுநர் அப்ரஹா அஸ்ரம் காபாவை இடிக்க யானைகளின் பெரிய படையுடன் மெக்காவுக்கு வந்திருந்தார். அவரின் இந்த பயணத்தின் நோக்கமானது வணிக ரீதியாக தனக்கும் தனது நாட்டிற்கும் பயனடைவதற்கு காபாவை இடித்து எமனில் அதை மீண்டும் கட்ட வேண்டும் என்பதாகும். ஏனெனில் அக்காலத்தில் மெக்கா என்னும் இப்பகுதி உலகின் பகுதிகளிலுள்ள மிக சிறந்த கண்காட்சி மையமாக இருந்தது.

அவர்கள் மெக்காவின் புறநகரப்பகுதிக்கு வந்தவுடன் மெக்கா மக்களின் ஒட்டகங்களை அனைத்தும் பறிமுதல் செய்தனர். அபீஸீனியர்களின் ஆற்றல்மிக்க இராணுவத்தை மெக்கா மக்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை. நபி (ஸல்) அவர்களின் தாத்தாவும் மெக்கா மக்களின் தலைவருமான அப்துல் முத்தலீப்பைத் தவிர, மற்றனைவரும் சுற்றியுள்ள மலைகளில் தஞ்சம் அடைவதற்காக மெக்காவிலிருந்து தப்பி விட்டனர். ஆனால் மெக்காவின் புறநகரிலுள்ள அப்ரஹாவை சந்திக்க அப்துல் முத்தலீப் சென்றார்.

அவரைப் பார்த்ததும் அப்ரஹா, காபாவை அழிக்க கூடாது என்று அழுது மன்றாடுவதற்காக அவர் வந்ததாக எண்ணினார். ஆனால் அது அவ்வாறு அல்ல அப்ரஹா குழப்பமடைந்ததைக் கண்டு, அப்துல்முத்தலீப் அவரிடம் கூறினார்.

**“ஓட்டகங்கள் எங்களுடையவை அவற்றை நீங்கள் திரும்ப தரவேண்டும். ஆனால் காபாவை பொறுத்தவரை அதன் உரிமையாளர் அதைக் கவனித்துக் கொள்வான்”**

அப்ரஹாவின் பெரிய இராணுவம் காபாவின் புனித இடத்தை நோக்கி படையெடுத்தது. அது மினாவில் முஹச்சர் என்ற பள்ளத்தாக்கில் கட்டாயமாக நிறுத்தப்பட வேண்டியிருந்தது, ஏனெனில் அவ்விடத்திலிருந்து யானைகள் நகரவில்லை. பின்னர் காபாவின் பாதுகாவலனாகிய அல்லாஹ் சிறிய சிஜ்ஜில் கற்களை அப்ரஹாவின் இரணுவத்தின் மீது வீழ்த்த பறவைகளின் படையை அனுப்பினான். அதன் விளைவாக அப்ரஹாவும் அவரது இராணுவமும் அழிக்கப்பட்டன.

**“உமது இறைவன் யானைப் படையினர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதை நீர் பார்க்கவில்லையா? அவன் அவர்களின் திட்டத்தைத் தோல்வியடையச் செய்யவில்லையா? மேலும் அவன் அவர்கள் (பிணங்கள்) மேல் கூட்டம், கூட்டமாக பறவைகளை அனுப்பினான். அவை (இறந்து அழுகிப்போன) அவர்களைக் களிமண் கற்களின் மேல் அடித்துக்கொண்டவாறு தின்றன”** (105 :2-6)

## THE RECONSTRUCTION THE KA’ABA

### காபாவின் மறுசீரமைப்பு

இந்த கற்களின் அற்புதசக்தி என்ன என்பதைப் பற்றியும் அதன் இரகசியத்தைக் குறித்தும் அல்லாஹ் மட்டுமே அறிந்திருக்கிறான். இக்காரணத்தால்தான் குறைஷிகள் காபாவை இடித்து மறு சீரமைக்க தயங்கினர் முடிவில் அவர்களின் தலைவர்களில் ஒருவரான வாலித்பினு முகிரா அம்மாக்களிடம் கூறினார், நமது நோக்கம் அப்ரஹாவின் நோக்கத்தைப் போல் அல்ல. நம்மை பொறுத்தவரை வெள்ளத்தால் சேதமடைந்த அக்கட்டிடத்தை மீண்டும் கட்டியெழுப்ப நாம் விரும்புகிறோம். அதை அவர்கள் உணர்ந்தபின்பு நம்பிக்கையுடன் அவர்களின் அத்திட்டத்திற்கு பணம் திரட்ட முடிவு செய்தனர். ஆனால் தடைசெய்யப்பட்ட பரிவர்த்தனையிலிருந்து வரும் பணத்தை அவர்கள்

ஏற்கவில்லை. இந்த அணுகுமுறையானது மிகுந்த பாராட்டுதல்களுக்குரியதாகவும், எதிர்கால மாறுதலுகளுக்கான குறிகோளாகவும் அமைந்தது. முஹம்மது (ஸல்) என்னும் ஒரு மாதிரி குடிமக்கன் இந்த புனித மாளிகையின் மறுசீரமைப்பு பணிகளில் தீவிரமாக பங்கேற்றார். அபூகுபைஸ் மலையிலிருந்து பெரிய கற்களை அவரது கழுத்தில் சுமந்து கொண்டுவரப்பட்டது. கட்டுமான பணிகள் மிக வேகமாக நடைபெற்றது.

இருப்பினும் கருங்கல்லை அதன் சரியான பகுதியில் வைக்கும் நேரம் வந்த வேளைகளில் ஒரு சர்ச்சை அவர்களுக்கிடையே உருவாகியது. அது தொடர்பாக வெவ்வேறு கோத்திரங்களுக்கிடையே சண்டை எழுந்தது. ஒவ்வொரு குழுவும் கருங்கல்லை தூக்கி நகர்த்தக்கூடிய பெருமையை பெற விரும்பினர். சண்டை வரம்புமீறியது. ஒவ்வொரு கோத்திரத்தின் தலைவர்களும் ஒருவருக்கொருவர் மோதிசாவும் நிலைமை வந்தது.

இந்த கருத்து வேறுபாடு சில நாட்கள் தொடர்ந்து வந்தும் அதற்கு சரியான ஒரு தீர்வு காணமுடியவில்லை. முடிவில், அவர்களின் முன்காலத்தலைவர்களில் ஒருவரான அபு உமய்யல் மக்சூமி அவர்கள் ஒரு ஆலோசனை முன்வைத்தார்.

சகோதரர்களே! நீங்கள் உங்கள் கடவுளை மகிழவைப்பதற்கு விரும்புகிறீர்கள். அதே நேரத்தில் நீங்கள் ஒருவருக்கொருவர் கொல்லவும் விரும்புகிறீர்கள். ஆகவே அஸ்ஸபா வாயில் வழியாக முதலில் நுழையும் நபர் இக்குழப்பத்திற்கு தீர்வு காண்பார்.

அனைவரும் இந்த ஆலோசனையை ஏற்று காத்திருந்தனர். சஸ்பென்ஸ் மிகவும் அதிகரித்தது. இந்நேரத்தில் திடிரென்று ஒருவர் உள்ளே நுழைந்தார். அப்பொழுது அனைவரும் சேர்ந்து முஹம்மது….. அல் அமீன்….. நம்பகமான மனிதன் என்று கூரலிட்டனர். அவரைப் பார்த்து அனைவரும் திருப்தியடைந்தனர். அவர்களுக்கிடையே உள்ள சண்டையை அறிந்த முஹம்மது (ஸல்) அவர்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் திருப்திப்படுத்தினார். அதாவது அவர் ஒரு பெரிய துணியைக் கொண்டு வரச் சொன்னார், அத்துணியில் அவர் அக்கருப்புக் கல்லை வைத்தார் பின்னர் கல்லை எடுத்துச் செல்வதற்கு ஒவ்வொரு கோத்திரத்தின்

பிரதிநிதியினரிடமும அத்துணியின் ஒவ்வொரு விளிம்பிலும் பிடிக்க சொன்னார். அனைவரும் சேர்ந்து கல்லுடன் துணியை உயர்த்தினர். நிர்ணயிக்கப்பட்ட பகுதிக்கு கல் உயர்ந்தபோது முஹம்மது (ஸல்) அவர்கள் அக்கல்லை எடுத்து நிர்ணயிக்கப்பட்ட பகுதியில் வைத்தார். திரு நபியின் அச் சைகையானது இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் செய்ததைப் போல் அமைந்தது. இது எதிர்கால தீர்க்க தரிசின பணியின் தொடர்ச்சி மற்றும் தொகுப்புக்கான சான்றாக எண்ணப்படுகிறது.

## THE IMPORTANCE OF THE BLACK STONE:

## கறுப்பு கல்லின் முக்கியத்துவம்.

"இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் கூற்றுப்படி இறைத்தூதர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் **"இந்த கருப்புக்கல் சொர்க்கத்திலிருந்து வந்தது, அது பாலை விட வெண்மையாக இருந்தது. பின்னர் மனிதனின் பாவங்கள் அதைக் கருப்பாக்கியது" (திர்மிதி, அஹமது)**

நான் சுட்டிக் காட்டிய ஹதிஸைப் பற்றி நாத்திகர்கள் விமர்சனங்களை எழுப்பியுள்ளனர். விக்கிரகாராதனை செய்பவர்களின் பாவங்களால் கல் எவ்வாறு கறுக்கப்படும்? அப்படியென்றால் அல்லாஹ்வின் தனித்தன்மைமீது முழுமையாக நம்பிக்கை கொண்டு, விசுவாசத்தின் பாகுபாடுகளுக்கு கீழ்படிந்து வாழும். நம்பிக்கையாளர்களின் செயல்களால் ஏன் அக்கல் சுத்திகரிக்கப்படவில்லை? (வெண்மையாகவில்லை?)

## MY REPLY / எனது பதில்

அல்லாஹ் அதை விரும்பியிருந்தால் அது அவ்வாறே மாறியிருந்திருக்கும். ஆனால் அல்லாஹ் அதை இவ்வாறே இருக்க செய்தான். பொதுவாக, கருப்பு நிறங்கள் தன்னை வண்ணமயமாக்க விடுவதில்லை. இது வெள்ளை நிறத்தின் எதிரானது. மேலும் இப்போது அதன் அடையாளமாகயிருக்கும் இந்த கருப்பு வண்ணம் எல்லா நிலைகளிலும் தீமையை கைவிட வேண்டும் என்பதை மானிட குலத்திற்கு நினைவூட்டுகிறது. புனிதயாத்திரை என்பது நம்பிக்கையாளர்களுக்கு சுத்திகரிப்புக்கான ஆரம்ப இடமாகயிருக்கிறது. இதனால் அதன் ஒவ்வொரு

சடங்களிலிருந்தும் மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய ஒவ்வொரு பாடம் இருக்கிறது. இதன் முக்கிய நோக்கம் என்பது மனிதனின் முழுமையான சுத்திகரிப்பாகும். புனித யாத்திரையில் உள்ள ஒவ்வொரு அடையாளங்களும் அவர்களின் முந்தைய வாழ்கையை விட்டு வெளியேற வேண்டும் என்பதற்கான நினைவூட்டல்களாகும், குறிப்பாக அவர்களின் வாழ்க்கை பாவங்களால் சூழப்படட்தாகயிருந்தால்!

கல்லைத் தொடுவது அல்லது அதை முத்தமிடுவது அல்லது அதைச் சுட்டிக்காட்டுவது, கையை அசைப்பது போன்றவை பெரிய அல்லது சிறிய புனித யாத்திரையின் ஒரு பகுதியாகிறது. அதாவது அது ஒரு மேலாதிக்க மதச் செயலாக காபாவைச் சுற்றி வலம் வர விரும்பும் நபரின் முதல் செயலாகிறது. ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்களின் கூற்றுப்படி **“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எப்போது மொக்காவில் வந்திருந்தாலும் அக்கல்லின் அருகில் சென்று அதைத் தொட்டுக்கொள்வார். பின்னர் அவர் தனது வலது புறம் சென்று மூன்று முறை விரையிவில் காபாவை வலம் வருவார், நான்காவது முறை சதாரண நிலையில் நடந்து காபாவை வலம் வருவார்”. (முஸ்லீம்)**

உமர் (ரலி) அவர்கள் கல்லின் அருகில் சென்று அதை முத்தமிட்டதாக தகவல்கள் உள்ளது. பின்னர் அன்னார் கூறிய வார்த்தையாவது **“நீ ஒரு கல் என்று எனக்கு தெரியும். உனக்கு ஒரு நன்மையையோ, தீங்கையே கொண்டு வர முடியாது என்றும் எனக்கு தெரியும். நபி (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிடுவதை நான் பார்க்காமல் இருந்திருந்தால் நானும் அதை செய்திருக்கமாட்டேன்” (புகாரி, முஸ்லீம்)**

எனவே புனித யாத்திரீகருக்கு அதை முத்தமிட முடியாவிட்டால், அவர் அதை தனது கையால் தொட்டுக் கொள்ளலாம் அல்லது ஏதேனும் ஒரு பொருளால் அதை சுட்டிக்காட்டியபின்பு அப்பொருளை முத்தமிட்டார்.

மற்றொரு நபி மொழியில் அபூதுபைல் (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார் **“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காபாவை சுற்றி தவா..ப் செய்வதை நான் பார்த்தேன். அவரிடம் இருந்த ஒரு வெள்ளை குச்சியால் மூலையில்**

**தொட்டு (கருப்புகல் இருக்கும் பகுதியில்) பின்னர் அக்குச்சியை முத்தமிட்டார்" (முஸ்லீம்)**

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார், **"திரு நபி (ஸல்) அவர்கள் தனது ஒட்டகத்தின் மீது அமைந்தவாறு காபாலை தவா.்.ப் செய்தார். மேலும் ஒவ்வொரு முறையும் அந்த மூலையில் வரும்போது அவர் அக்கல்லை சுட்டிக்காட்டி அல்லாஹ் அக்பர் என்று கூறுவார். (புகாரி)**

**காபாவின் கல் மற்றும் யேம்மனி மூலயைத் தொடுவது எல்லாம் வல்ல அல்லாஹ் நமது பாவங்களை நீக்குவதற்கான ஒரு வழியாகும். இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டேன் அவற்றை தொடுவது பாவங்களுக்கு பரிகாரம் காண்பதற்கான ஒரு வழியாகும் (திர்மிதி)**

கல்லுக்கு அருகிலுள்ள மற்ற முஸ்லீம்களைத் தாக்கவோ அல்லது எதிர்த்துப் போராடவோ முஸ்லீம்களுக்கு அனுமதியில்லை. ஏனெனில் அக்கல்லை நியாயமான முறையில் தொட்டவர்கள் யார் என்றும் அல்லாஹ்வின் மற்ற அடியார்களுக்கு தீங்கு விளைவித்தபின் அதை தொட்டவர்கள் யார் என்றும் மறுமையில் கேள்வி கேட்க்கப்படும் என்று திரு நபி (ஸல்) கூறியிருக்கின்றார்கள்.

## THE STRUCTURE OF THE KA"ABA

## காபாவின் கட்டமைப்பு

ஹிஜ்ரா 8-ம் ஆண்டில் மெக்கா வெற்றிக்குபிறகு திரு நபி (ஸல்) அவர்கள் காபாவின் கட்டிடத்தை மாற்றியமைக்கவில்லை. காபாவின் உள்ளே பாதுகாக்கப்பட்டிருந்த சிலைகளை அவர் அழித்தார். எல்லாவிதமான அழுக்குகளிலிருந்தும் காபா பாதுகாப்பை பெற்றது. பூவுலகில் மிக சிறந்த கட்டிடம் காபா என்பதில் சந்தோகமில்லை. அதன் மதிப்பு மேன்மேலும் அதிகரிக்க வேண்டும் என்று அல்லாஹ்விடம் துவா செய்வதை முஸ்லீம்கள் ஒருபோதும் நிறுத்த மாட்டார்கள். ஒவ்வொரு ஆண்டும் பத்து இலட்சத்திற்கு

அதிகமான பக்தர்கள் இதனை முதன்முறையாக பார்வையிடுகின்றனர். அப்பக்தர்கள் கீழ் கூறும் பிரார்த்தனைகளை உச்சரிக்கின்றார்கள். **“இறைவா இந்த ஆலயத்தின் மகத்துவம் மற்றும் மதிப்பினை நீ அதிகரிக்கசெய்வாயாக! பெரிய அல்லது சிறிய புனித யாத்திரை செய்யும் ஒவ்வொருவர் மீதும் நீ அதிகளவு அருட்களை பொழிவாயாக**

இதனால்தான் உலகின் மிக விலையுயர்ந்த கதவு காபாவுக்கு உள்ளது. இக்கதவுக்கு 280 கிலோ கிராம் இடையுள்ளது. 99% தூய தங்கத்தால் அது செய்யப்பட்டுள்ளது. 80 மில்லியன் மொரீஷியன் ரூபாவை விட இதற்கு அதிக மிதிப்புள்ளது. இதில் குர்- ஆனிய வசனங்கள் சித்திரமொழியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உண்மையில் காபாவின் வாசல் இரண்டு கதவுகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒன்று உள்நோக்கி எதிர்கொள்ளகிறது மற்றொன்று வெளிப்புறம் நோக்கி எதிர் கொள்கிறது. இது தரையிலிருந்து 2.25 மீட்டர் உயரத்தில் உள்ளது.

காபா 650 சதுர மீட்டர் பரப்பானவை. கருப்பு சில்க்கு துணியால் காபாவை நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. இத்துணியில் குர் ஆனிய வசனங்கள் தூய தங்கத்தால் எழுதியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் உற்பததிக்கு ஒரு பிரத்தியேகமான தொழில் துறை உள்ளது. இந்த தொழிற்சாலை ஜித்தாவிலிருந்து மெக்கவுக்கு செல்லும் பழைய நெடுசாலையில் அமைந்துள்ளது. இதில் திறமை பெற்ற சுமார் 250 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் நிபுணத்துவும் பெற்றவர்கள். நெசுவு, எம்பிராய்ட், சித்திர மொழி போன்றவைகளில்! இந்த ஆலை தொடர்ச்சியாக இயங்குகிறது. இதனால் ஆண்டுதோறும். காபாவை மூடுவதற்கு ஒரு புதிய அட்டையை உருவாக்க முடியும்.

காபா கட்டிடம் சரியாக கன வடிவைக் கொண்டதல்ல. இது பதின்மூன்று மீட்டர் நீளமும், பன்னிரண்டு மீட்டர் அகலமும், பதினைந்து மீட்டர் உயரமும் கொண்டுள்ளது. காபாவின் சுவர் மூன்று கோண வடிவத்தைக் கொண்டதல்ல. மாறாக அது நான்கு கோணங்கள் கொண்டவையாகும். காபாவின் உட்புறம் ஒரு வெற்று அறை போன்று தோற்றமளிக்கிறது. அதன் சுவர்கள் பளுங்கால்

மூடப்பட்டிருக்கும். திருக் குர் - ஆனின் மாபெரும் ஒரு நகல் ஸ்டான்றில் இருப்பதை காணலாம்.

கிறிஸ்தவ ஆண்டு 683 – ல் முஆவியாவின் மகனாகிய கலீ∴பா யாசீதின் ஆட்சிக்கு எதிராக, அப்துல்லாஹ் இப்னு அஸ்சுபைர் கிளர்ச்சி செய்தார். 693 – ஆம் ஆண்டில் ஹஜ்ஜாப்னு யூஸுப் மெக்காவுக்கு எதிராக படையெடுத்து, மெக்காவை கைப்பற்றியதுடன் அப்துல்லாஹ் இப்னு அஸ்சுமைபைரை கொல்லவும் செய்தார். அக்காலயளவில் கலீ∴பாவாக இருந்த அப்துல் மாலிக்கிடம் செய்த உடன்படிக்கையின்படி காபாவை இடித்து குறைஷகளின் மாதிரியின்படி திரும்பவும் கட்டப்பட்டது. 1630 – ஆம் ஆண்டில் காபாவின் வட மேற்கு சுவர் ஒரு பெரிய வெள்ளபெருக்கத்தால் சேதமடைந்தது. சுல்த்தான் முஹம்மது அதை இடிக்க உத்தரவிட்டு குறைஷிகளின் மாதிரியின் படியே அசல் கற்களை பயன்படுத்தி மீண்டும் காபாவை கட்டியெழுப்பட்டது. அதன் பின்னர் யாரும் அதன் மாதிரியை கடுமையாக மாற்றவில்லை. சிறிய புனரமைப்பு மட்டுமே நடந்தது. இந்த காபாதான் இன்றும் நிலை நிற்பது.

காபாவிற்கு பைத்துல்லாஹ் (இறைவனின் வீடு) பைத்துல் ஹராம் (மரியாதைக்குரிய வீடு) பைத்துல் அத்தீக் (புராதனை வீடு) அல் அஹ்தஸ் (பரிசுத்த ஆலயங்களில் வைத்து மிக புனிதமானது) அல்முஹதஸ் (தூய இதயம்) போன்ற பெயர்கள் உள்ளன. **“எல்லா மக்களுடைய பயனுக்காகவும் முதன் முதலாக உருவாக்கப்பெற்ற இல்லம் மக்காவிலுள்ளதாகும். அது எல்லா உலகங்களுக்கும் அருளுக்குரியதும் நேர்வழிக்குரியதுமான இடமாகும்” (8:97)**

மட்டுமல்ல அல்லாஹ் கூறுகின்றான் **“அதில் ஒளிமயமான பல அடையாளங்கள் உள்ளன. அது இப்றாஹீம் நின்ற இடமாகும் அதில் நுழைபவர் அமைதி பெற்றவராகி விடுகிறார். அதன் பக்கம் செல்ல வாய்ப்புக் கிடைத்த மக்கள் ஹஜ் செய்வதை, அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். நிராகரிக்கின்றவர், அல்லாஹ் எல்லா உலகங்களைவிட்டும் தேவையற்றவன் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளட்டும்”(3:98)**

இறுதியாக கூறுகிறேன் புனித காபா, மண்ணுலகிலும் விண்ணுலகிலுமாக இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது. மனிதன் எங்கிருந்தாலும் சரி, கடலிலோ, அல்லது நிலத்திலோ அல்லது ஆகாயத்திலோ எங்கிருந்தாலும் தனது அன்றாட வாழ்க்கையில் ஐய்ந்து வேளை தொழுகைகளை நிறைவேற்ற காபாவின் திசையை நோக்கி திரும்ப வேண்டும்.

புனித மசூதியின் பாதுகாப்பிற்காக அயராத உழைப்பை மேற்கொள்பவர்களில் நம்மை அல்லாஹ் எண்ணுவானாக! மேலும் இஸ்லாத்தின் ஐய்ந்தாவது தூணாகிய ஹஜ், எல்லா நிலையிலும் அமைதியுடனும் பக்தியுடனும் நிறைவேற்றுவதற்கான பாதையை அல்லாஹ் நமக்கு திறந்தருளட்டும். இன்ஷா அல்லாஹ்.

உங்கள் அனைவருக்கும் முன் கூட்டியே **"ஈதுல் அத்ஹா முபாரக்"** தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாம், அதன் அடையாளங்கள் மற்றும் முஸ்லீம் மக்களை அல்லாஹ் என்றென்றும் பாதுகாத்து கொள்வானாக! சாத்தானின் மற்றும் அவனது படையினரின் எதிராக தங்களது நம்பிக்கையை பாதுகாத்துக் கொள்ள அவன் அவர்களுக்கு வழிவகுத்தருளட்டும். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Translated by**
*Naib Amir, Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**SIRAJ DEENSAHIB**
Amir Tamil Nadu State, India
**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**